## தென்மராட்சிக் கல்வி வலயம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2011
## கணிதம்

தரம் - 06 நேரம் - 2.00 மணி

பெயர் / சுட்டெண் :

### பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. கூட்டுக 2709 + 383

2. 48 ஐ கிட்டிய பத்திற்கு மட்டம் தட்டும்போது பெறுமானம் யாது?

3. பந்து ஒன்றின் விலை ரூ. 20 எனின் 5 பந்துகளின் விலையைக் காண்க.

4. தரம் 6 மாணவர்களில் திங்கட்கிழமை சைக்கிளில் வந்த மாணவர்களின் எண்ணிக்கை 12 எனின் அதனை வரவுக்குறி மூலம் காட்டுக.

5. அறுபத்தாறு மில்லியன் எண்ணூற்று முப்பத்து நான்காயிரத்து முந்நூற்றிபத்து நான்கு என்பதை இலக்கத்தில் எழுதுக.

6. $\frac{2}{3} = \frac{10}{\square}$ இடைவெளியை நிரப்புக.


7. ஒரு முழுச்சுற்றின் ¼ சுற்று குறிக்கும் கோணத்தின் பெயர் யாது?

8. வேலை ஒன்று மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பி.ப 5.00 மணிக்கு முடிவடைந்தது எனின் இவ்வேலை செய்வதற்கு எடுத்த காலம் எவ்வளவு?

9. 10 .இற்கும் 20 இற்கும் இடையே உள்ள எல்லா முதன்மை எண்களையும் எழுதுக.

10. வட்டவடிவக் கடிகாரத்தின் மத்தியில் முட்கள் இணைக்கப்பட்ட புள்ளி எப்பெயரால் பொதுவாக அழைக்கப்படும்?

11. a = 5 எனின் a+12 இன் பெறுமானம் யாது?

12. 


உருவில் P யிற்கு R எத்திசையில் உள்ளது?

13. 


குறைந்த வெப்பநிலையிலுள்ள நகரம் எது?


14. 543 ஐ எண் சட்டத்தில் காட்டுக.

15. 2075g = ________kg_______g என்பதில் இடைவெளிகளை நிரப்புக.

16. 0.75, 0.25, 0.4, 1.3 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.


17. 24 = [2] x [2] x [ ] x [3]

வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண் யாது?

18. 


உருவின் பரப்பளவைக் காண்க.

19. 10 : 15 இனை எளிய வடிவில் தருக.

20. 

உருவில் காட்டப்பட்ட முக்கோணத்தை கோண அடிப்படையில் வகைப்படுத்துக.

தென்மராட்சிக் கல்வி வலயம்

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2011

கணிதம்


தரம் - 06 நேரம் - 2.00 மணி

பெயர் / சுட்டெண் :

## பகுதி II

1ம் வினா உட்பட 5 வினாக்களிற்கு விடை தருக.

I திண்மங்கள் தொடர்பாக உமது அறிவை மேம்படுத்துவதற்காக கணித பாடம் செயற்பாடகச் செய்யப்பட்ட திண்ம உருக்களை ஞாபகப்படுத்துங்கள்.



i. மேலே காட்டப்பட்டுள்ள உருவை நீங்கள் தயாரித்து இருப்பீர்கள். இத்திண்ம உருவின் பெயர் என்ன? (2 புள்ளி)

ii. இத் திண்ம உருவின் முகங்கள் ஒவ்வொன்றும் எவ்வடிவத்தைக் கொண்டுள்ளது? (2 புள்ளி)

iii. இவ்வுருவை நீங்கள் அமைப்பதற்குப் பயன்படுத்திய வலையுருவை வரைக. (4 புள்ளி)

iv. இவ்வலையுருவை வரைந்து இத்திண்ம உருவை உருவாக்குவதற்கு நீர் பயன்படுத்திய உபகரணங்கள் 3 தருக. (2 புள்ளி)

v. இத் திண்ம உருவிற்கு எத்தனை உச்சிகள், எத்தனை முகங்கள் உண்டு? (2 புள்ளி)

vi. இத் திண்மத்தின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? (2 புள்ளி)

vii. இவ் விளிம்புகளின் நீளங்கள் தொடர்பாக யாது கூறுவீர்? (2 புள்ளி)

2

| | | | |
|---|---|---|---|
| 2, | 7, | 5, | 11 |
| 13, | 15, | 17, | 19 |
| 20, | 21, | 16, | 25 |

i. முதன்மை எண்ணாகவும் இரட்டை எண்ணாகவும் வரும் எண்ணை எழுதுக. (1 புள்ளி)

ii. ஒற்றை எண்களைத் தெரிவு செய்க. (2 புள்ளி)

iii. முக்கோணி எண்களைத் தெரிவு செய்க. (2 புள்ளி)

iv. நீர் மேலேயுள்ள வினாவிற்குத் தெரிவு செய்த முக்கோணி எண்களின் கூட்டுத்தொகை யாது? (2 புள்ளி)

v. அது எத்தனையாவது சதுர எண் ஆகும்? (2 புள்ளி)

vi. ஒற்றை எண்ணாகவும், முக்கோண எண்ணாகவும் உள்ள எண்களை எழுதுக. (2 புள்ளி)

3. cm, ml, l, mm, km, kl, m

தரப்பட்டுள்ளவற்றை ஏதாவது ஒரு பண்பின் அடிப்படையில்

i. இரு கூட்டங்களாக வேறுபடுத்தி எழுதுக. (3 புள்ளி)

ii. அவற்றை வட்டத்தினுள் எழுதுக. (2 புள்ளி)

iii. அவ்வட்டங்களிற்கு A,B எனப் பெயரிடுக. (3 புள்ளி)

iv. ஒவ்வொரு கூட்டத்திற்கும் பெயர் ஒன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

4. தரம் 6 வகுப்பு ஒன்றில் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தரும் முறையும் மாணவர் எண்ணிக்கையும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வருகை தரும் முறை | மாணவர்எண்ணிக்கை |
|---|---|
| சைக்கிள் | 15 |
| பஸ் வண்டி | 07 |
| மோட்டார் கார் | 02 |
| நடந்து | 10 |


i. இதனை படவரைபு ஒன்றில் காட்டுக. (5 புள்ளி)
ii. குறைவான மாணவர்கள் வருகை தரும் முறை எது? (2 புள்ளி)
iii. நடந்து வருபவர்களிலும் பார்க்க சைக்கிளில் எத்தனை பேர் கூடுதலாக வருகின்றனர்? (2 புள்ளி)
iv. தரம் 6 வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? (2 புள்ளி)

5. புடவைக் கடையொன்றில் கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியல் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

| பொருள் | விலை |
|---|---|
| 1 சாரம் | ரூ. 550.00 |
| 1 சாறி | ரூ. 2500.00 |
| 1 சட்டை | ரூ. 800.00 |
| 1m காற்சட்டை துணி | ரூ. 250.00 |
| 1 சேட் | ரூ. 500.00 |

i. 2 m 50 cm காற்சட்டைத் துணி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? (2 புள்ளி)
ii. 3 சாறிகளின் விலை யாது? (2 புள்ளி)
iii. சாரம் ஒன்றின் விலை சேட் ஒன்றின் விலையிலும் எவ்வளவு அதிகம்? (2 புள்ளி)
iv. ஒரு சட்டையும் 1m காற்சட்டையும் வாங்கக் கூடிய பணத்திற்கு வேறு எவ்வெப் பொருட்களை வாங்க முடியும்? (3 புள்ளி)
v. சட்டை ஒன்றையும், சேட் ஒன்றையும் வாங்கிய பின் ரூ. 1500 ஐ கடைக்காரனுக்குக் கொடுத்தால் மீதியாக எவ்வளவு பணம் கிடைக்கும்? (2 புள்ளி)

VI




i. மரத்திற்கு மான் எத்திசையில் உள்ளது? (1 புள்ளி)
ii. மயிலிற்கு கிழக்குத் திசையில் எது உள்ளது? (2 புள்ளி)
iii. முயலுக்கு எத்திசையில் மயில் உள்ளது? (2 புள்ளி)
iv. மரத்திற்கு தென்கிழக்குத் திசையில் எது உள்ள? (2 புள்ளி)
v. கிளிக்கு எத்திசையில் குரங்கு உள்ளது? (2 புள்ளி)
vi. யானைக்கு எத்திசையில் மரம் உள்ளது? (2 புள்ளி)